DEREK PRINCE
MINISTRIES - INDIA



தேவனுடைய வாக்குத்தத்தங்களின் தேசத்தில் நடை போடுதல்

பகுதி 5

இந்த போதனை தொடரில், “தேவனுடைய வாக்குத்தத்தங்களின் தேசத்தில் நடை போடுதல்” என்ற கருப்பொருளை நாம் தியானித்து வருகிறோம். நம்முடைய வாழ்வில் எழும்பும் எல்லா தேவைகளுக்கும், அந்த பிரச்சனைக்கு தீர்வை கொண்டு வரும் குறிப்பிட்ட வாக்குத்தத்தங்கள் தேவனுடைய வார்த்தையில் உள்ளன என்பதை காண்பிப்பதே என்னுடைய நோக்கமாக இருக்கிறது. தேவனுடைய தீர்வு அவருடைய வாக்குத்தத்தங்களில் உள்ளது, அவ்வாக்குத்தத்தங்கள் நம்முடைய சுதந்திரமாக இருக்கிறன, என்ற கோட்பாடை நான் முன் அனுப்பிய கடிதங்களில் சுருக்கமாக எழுதினேன்.

பல்லாண்டுகளாக செய்த போதனை ஊழியத்தில், பின் வரும் மாபெரும் சத்தியத்தை நான் பல முறை சுட்டி காண்பித்துள்ளேன். பழைய ஏற்பாட்டில், யோசுவா என்னும் தலைவனுக்கு கீழாக, தன் ஜனங்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள்ளாக நடத்தினார். ஆனால் புதிய ஏற்பாட்டில், இயேசு என்ற பெயர் கொண்ட தலைவரின் கீழ் (எபிரெயத்தில் அதே யோசுவா என்ற பெயர் தான்), தேவன் தம்முடைய ஜனங்களை வாக்குத்தத்தங்களின் தேசத்திற்குள்ளாக நடத்துகிறார். தேவன் அளித்த முழு சுதந்திரத்தையும் சொந்தப்படுத்த, யோசுவாவுக்கும் இஸ்ரவேலருக்கும் பல காலமானது. இஸ்ரவேல் பல வெற்றிகளை பெற்று, அதிக நிலத்தை கைப்பற்றின பின்பும், தேவன் அவர்களிடம் “சுதந்தரிக்கப்பட வேண்டிய தேசம் இன்னும் வெகுவாக உள்ளது” என்று கூறினார். கிறிஸ்தவர்களாகிய நமக்கும் இது உண்மை தான். யோசுவாவை போல, தேவன் நமக்கு கொடுத்துள்ள வாக்குத்தத்தங்களின் ஒரு சிறிய பகுதிக்குள்ளேயே நாம் பிரவேசித்துள்ளோம்.

நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களினுள் ஆளமாக செல்ல வேண்டுமானால் நமக்கு ஞானம் தேவைப்படும் - அதுவே இக்கடிதத்தின் தலைப்பாக உள்ளது. நம்முடைய பரம யோசுவாவாகிய இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால், தேவன் நமக்கு அளித்துள்ள இந்த அற்புதமான தேசத்தை நாம் இன்னும் ஆராய்ந்து பார்ப்போம்.

கிரியை செய்யும் ஞானம்

நம்முடைய தொடரின் இப்பகுதியில், ஞானத்தோடு தொடர்புடைய குறிப்பான தேவ வாக்குத்தத்தங்களை நாம் தியானிக்கலாம். அதை நாம் ஆரம்பிக்கும் முன், வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள எல்லா ஞானமும் எப்போதுமே நடைமுறைக்கேற்றதாகவே உள்ளது என்பதை நான் கூற விரும்புகிறேன். நான் தேவனோடு நடைப்போட்ட பல ஆண்டுகளில், அவர் மிகவும் நடைமுறையானவர் என்பதை கண்டுப்பிடித்தேன். உண்மையை சொன்னால், மிகவும் ஆவிக்குரியதாக இருக்கும் எதுவும் நடைமுறைக் கேற்றதாகவும் இருக்கிறதென்று நான் நம்புகிறேன்.

சில நேரத்தில் சில மக்கள் மிகுந்த “பரம சிந்தை” உள்ளவர்களாக இருப்பதால், அவர்கள் எந்த “பூலோக பிரயோஜனமும்” அற்றவர்களாக இருக்கின்றனர் என்று நாம் கூறுவதுண்டு. ஆனால் உண்மையில் அப்படிப்பட்ட

மக்கள் உண்மையில் ஆவிக்குரியவர்கள் அல்ல. பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட்ட மக்கள் மிகவும் நடைமுறை யாக செயலாற்றுகிறவர்களாகவே இருக்கின்றனர். இந்த கோட்பாடை தொடர்ந்து நாம் யாக்கோபு 1:5-8ல் உள்ள வாக்குத்தத்தத்தை முதலில் ஆராய்வோம். இது நடைமுறைக்கேற்ற ஒன்று.

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறை வுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துக்கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிப்பட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்ற வனாயிருக்கிறான்.

இந்த வசனத்தில், நமக்கு தேவைப்படும் போது, நம்மில் எவருக்கும், எந்த சூழ்நிலையிலும் ஞானத்தை தருவேன் என தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார். "ஒருவரையும் கடிந்துக்கொள்ளாமல் யாவருக்கும் சம்பூரணமாக கொடுக்கும்" தேவனிடத்தில் நாம் கேட்க வேண்டும்.

இந்த வாக்குத்தத்தம் ஆச்சரியமாக இருக்கிற தல்லவா? தேவைப்படும் யாவருக்கும் தேவன் ஞானத்தை சம்பூரணமாக தருவார். இதை தாண்டி, ஞானத்தில் குறைவுப்படுவதாலும், அவரிடத்தில் அதை கேட்பதினாலும் தேவன் நம்மை கடிந்துக்கொள்வதில்லை. நமக்கு ஞானம் குறைவுப்படுகிறதென்று தேவன் அறிந்திருக்கிறார். நம்முடைய குறைவை பூர்த்தி செய்ய அவர் ஆயத்தமாகவும் இருக்கிறார். "அது உங்களுக்கு கொடுக்கப்படும்" என்பது தான் யாக்கோபில் உள்ள வாக்குத்தத்தம்.

இப்பட்டிப்பட்ட உறுதிமொழிகளிருக்க, தேவனிடம் ஞானம் கேட்பதிலிருந்து நாம் பின்வாங்கவே கூடாது. ஆனால் நமக்கு தேவையான ஞானத்தை இல்லாதவர்களாய் நாம் இருப்பதற்கு காரணம், நாம் அந்த தேவையை ஒப்புக்கொள்ளாதது தான். நாம் ஞானத்தின் குறைவுள்ளவர்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்வதில்லை. நம்மிலும், நம்முடைய சொந்த அறிவிலும் நாம் நம்பிக்கை வைப்பதை அதிகம் விரும்புகிறோம் - இது பிரச்சனைகளை தான் உறுவாக்குகிறது. மற்ற நேரங்களில், ஞானத்தின் குறைவை நாம் உணருகிறோம் ஆனால் தேவனிடம் கேட்க வேண்டும் என்று நமக்கு தோன்றுவதில்லை.

சந்தேகங்கள் இல்லை

நாம் ஞானத்தில் குறைவுள்ளவர்களாக இருப்பதற்கு மூன்றாவது காரணம், நாம் விசுவாசத்தில் அதை கேட்பதில்லை. தம்மிடத்தில் எதையாகிலும் கேட்கும் போது, நாம் கேட்பதை அவர் கொடுப்பார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும் என்று தேவன் வலியுறுத்துகிறார். ஆகையால் தான், மேல் காணும் பகுதியில், "அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்" என்று யாக்கோபு கூறுகிறார். இந்த சத்தியம் வேதாகமத்தின் முழு போதனையோடும் ஒத்திருப்பதை நாம் எபிரெயர் 11:6ல் காணலாம்:

...ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.

தேவனிடம் எதை பெற வந்தாலும், நீங்கள் அவரை விசுவாசிக்க வேண்டுமென்றும், அவர் பலனளிப்பார் என்பதை விசுவாசிக்க வேண்டுமென்றும் தேவன் விரும்புகிறார். இந்த தருணத்தில், அந்த நிபந்தனை, ஞானத்தை பெறுவதற்கு குறிப்பாக பயன்படுகிறது.

நாம் தேவனிடம் ஞானத்தை நாடும் போது, நாம் விசுவாசிப்பதற்கு நம்முடைய இருதயங்களையும் மனதையும் உறுதியாய் செலுத்த வேண்டும். எதை விசுவாசிக்க? தாழ்மையுள்ள விசுவாசத்துடன் கேட்டால், நாம் கேட்பதை தேவன் கொடுப்பார் என்பதையே. நம்முடைய தேவையை நாம் கண்டு, அவருடைய உதவியை நாட, தேவன் உண்மையாக நமக்காக காத்திருக்கிறார். அவர் கொடுக்க காத்திருக்கிறார். அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

கிறிஸ்துவுக்குள் மறைக்கப்பட்டது

இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கும் நம்முடைய முழு சுதந்திரத்தின் முக்கிய பகுதியாக ஞானம் இருக்கிறது. ஆனால் அதை நாம் எங்கே கண்டடையலாம்? 1 கொரிந்தியர் 1:30, 31ல், பவுல் நமக்கொரு துப்பு கொடுக்கிறார்:

அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள்... அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.

இந்த பகுதியின் படி, இயேசுவே நம்முடைய ஞான மாக இருக்கிறார். நம்முடைய ஞானமெல்லாம் அவரில் உள்ளது. (அவர் நம்முடைய நீதியும், பரிசுத்தமும், மீட்புமாகவும் இருக்கிறார்.)

இந்த கோட்பாட்டை ஆதரிக்கும் இன்னொரு வசனம் கொலோசெயர் 2:2-3ல் காணப்படுகிறது. இது கொலோசெயரிலும் மற்ற இடங்களிலும் இருந்த கிறிஸ்தவர்களை குறித்த பவுலின் கோரிக்கையில் உள்ளது:

அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாக வேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன். அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.

ஞானம் எங்கே? இந்த வசனம் அதை நமக்கு அறிவிக்கிறது. ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் மறைந்துள்ளன.

நான் இயேசுவை அறிந்துக்கொள்ளும் முன்னே, நான் கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில், தத்துவயீயலின் பேராசரியராக இருந்தேன். நான் தொடர்ந்து ஞானத்தை தேடி வந்தேன்; ஆனால் உண்மையை சொன்னால், நான் மனித ஞானத்தின் குப்பைமேட்டின் துளிகள் மீது வாழ்ந்துக்கொண்டிருந்தேன். நான் இயேசுவை அறிந்துக்கொண்ட போது, ஞானம் அறிவு என்பவைகளின் பொக்கிஷங்கள் அவருக்குள் இருக்கின்றன என அறிந்து நான் பெரும் மகிழ்ச்சி அடந்தேன்.

இசைந்திருக்கும் இருதயம்

ஞானத்தை குறித்து இன்னும் அதிகமாக கற்றுக்கொள்ள, அதின் எதிர் பொருளை உண்மையாய் கவனிக்க வேண்டும்: முட்டாள்தனம். முட்டாள்தனம், அறிவின் குறைவுபாடு மட்டுமல்ல என்பதை புரிந்துக்கொள்ள வேண்டும். அதை கடந்து முட்டாள்தனத்திற்கு ஒரு தார்மீக தன்மை உள்ளது; தேவனோடு இசைந்திராத ஒரு இருதயத்தை அது காண்பிக்கிறது. மாற்கு 7:21-22ல், புதிதாக்கப்படாத மனித இருதயத்திலிருந்து வெளிப்படும் பொல்லாத காரியங்களின் பட்டியலை இயேசு முன்வைக்கிறார். அவர் கூறுகிறார்:

“எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதங்கங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும்.”

முட்டாள்தனம் எப்பேற்பட்ட பொல்லாத நட்பை கொண்டிருக்கிறதென்று கவனியுங்கள்! களவுகள், கொலைபாதங்கங்கள், விபசாரங்கள், பொறாமைகள், தூஷணம், பெருமையும், மற்ற பல பொல்லாத செயல்களும் தானே. பேச்சிற்கு பயன்படுத்தப்படும் அரபி மொழியில், “புத்திசாலி” என்ற வார்த்தைக்கு எதிர்ச்சொல் “சோம்பலான” என்பதாகும். வேறு வார்த்தைகளில் சொன்னால், முட்டாள்தனம் என்பது, அறிவு குறைப்பாடு மட்டுமல்ல. அது நற்குணத்தின் குறைவாகவும் உள்ளது.

ஆவியின் பங்களிப்பு

முன்பதாக, “ஞானம் எங்கே?” என்ற கேள்விக்கு பதிலளித்தோம். தேவனால் நமக்களிக்கப்பட்ட ஞானம், இயேசு கிறிஸ்து தாமே என்பதையும், அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளின் பொக்கிஷங்களெல்லாம் அடங்கியுள்ளன என்பதையும் நாம் கண்டோம். ஆனால் அந்த பொக்கிஷங்களை நாம் அடைவது எப்படி? நாம் கேட்பதை தேவன் எவ்விதமாக பகிர்ந்தளிக்கிறார்?

இந்த கேள்விகளுக்கெல்லாம் ஒரு முக்கிய பதில் யோவான் 16:13 - 15ல் உள்ளதென்று நான் நம்புகிறேன். தம் சீஷரோடு பேசும்போது, இயேசு கூறுகிறார்:

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.

நாம் இது வரை கற்றுக்கொண்டதிலிருந்தும், அறிவு மற்றும் ஞானத்தின் பொக்கிஷங்களெல்லாம் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றன என்பதை நாம் தெளிவாக புரிந்துக்கொண்டோம். ஆனால், இந்த பொக்கிஷங்களை நமக்கு வழங்குபவர் - அவைகளிலிருந்து எடுத்து, அவைகளை நமக்கு வெளிப்படுத்துகிறவர் - பரிசுத்த ஆவியானவர் தான். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட
செய்திமடல் வருமானால் இமெயில்
முகவரி secretary@derekprince.in அல்லது
அலைபேசி 9585538202 தொடர்புகொண்டு
எந்த பெயரில், விலாசத்தில்
பல செய்தி மடல்கள் வருகிறது
என்பதை தெரியப்படுத்தவும்.

உங்கள் கவனத்திற்கு!!!

உங்கள் விலாசம் மாறும்பொழுது தயவு செய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்

ISSUE #013

WANT MORE?

- ◯ ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.
- ◯ தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- ◯ முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்..

See over for address details...

SIGN ME UP!

◯ தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்ளைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.

- ◯ ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- ◯ கடிதம் மூலமாக அனுப்பவும்

இராஜ்யத்தின் சகல பொக்கிஷங்களையும் நிர்வகிக்கிற வராக இருக்கிறார் - இவைகள் கிறிஸ்துவிலுள்ள ஞானம், அறிவு என்பவைகளையும் உட்படுத்தும்.

ஆகையால், தேவன் கொடுப்பேன் என்று வாக்களித்துள்ள ஞானத்தை பெற்றுக்கொள்ள, நாம் பரிசுத்த ஆவியானவருடன் ஒரு தொடரும், நெருக்கமான உறவை ஏற்படுத்த வேண்டும். நாம் தேவனுடைய ஆவியானவருடன் ஐக்கியத்திலும், இசைவிலும் நடைப்போட வேண்டும். ஆவியானவர் சொல்கிறதை நாம் கேட்க வேண்டும். அவருடைய மென்மையான உந்துதல்களுக்கு நாம் உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர் கொடுக்கும் எச்சரிப்புகளுக்கு நாம் செவி கொடுக்க வேண்டும்.

பல நேரங்களில், நமது பாதையில் பரிசுத்த ஆவியான வர் வைத்துள்ள எச்சரிப்பின் சிவப்பு விளக்குகளை நாம் எண்ணாமல், அவைகளை கடப்பதினால், பிரச்சக்குள் சிக்கிக்கொள்கிறோம். அவருடைய எச்சரிப்புகளை நாம் கவனிக்க தவறும்போது, நாம் ஏதாகிலும் விபத்து அல்லது பிரச்சனைக்குள் சிக்குகின்றோம். ஞானம் நமக்கு கிடைக்கவில்லை என்பதினால் இப்படிப்பட்ட துரதிஷ்டங்கள் நமக்கு நிகழ்வதில்லை. மாறாக, பரிசுத்த ஆவியானவருக்கு நாம் செவிக்கொடுக்காததினால் இவைகள் நிகழ்கின்றன.

முதிர்ச்சியை நோக்கி

ரோமர் 8:14ல் பவுல் கூறுகிறார்:

மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

“புத்திரர்” என்பதற்கு கிரேக்கத்தில் பயன்படுத்தப்படும் வார்த்தை, முதிர்ச்சியை குறிக்கின்றது. தேவனுடைய ஆவியினாலே தொடர்ந்து நடத்தப்படுவதே முதிர்ச்சி அடைந்த விசுவாசியின் அடையாளமாக இருக்கிறது. அந்த முதிர்ச்சி, பரிசுத்த ஆவியானவரின் ஒவ்வொரு உந்துதல், வழிகாட்டும் ஒவ்வொரு வார்த்தை மற்றும் அவருடைய ஒவ்வொரு மெல்லிய சத்தத்திற்கும் நம்மை உணர்வுள்ளவர்களாக மாற்றுகிறது. இவ்விதமாக நாம் செயல்பட்டால், ஞானம் நமக்கு தொடர்ச்சியாக வழங்கப்படுகிறது.

ஞானத்தை பெறுவதற்கு இன்னொரு வழிகாட்டும் நடைமுறை வார்த்தையை நான் முன்வைக்க விரும்புகிறேன். தேவன் எழுதிக்கொடுத்த ஞானத்தால் உங்கள் மனதை போஷியுங்கள்; அது தான் நீதிமொழிகளின் புத்தகம். நீதிமொழிகளின் புத்தகம் இந்த வார்த்தைகளை கொண்டு துவங்குகிறது:

இவைகளால் ஞானத்தையும் போதகத்தையும் அறிந்து, புத்திமதிகளை உணர்ந்து, விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப்பற்றிய உபதேசத்தை அடையலாம். இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும்.

நீதிமொழிகளின் புத்தகத்தில் 31 அதிகாரங்கள் உள்ளன. ஒரு நாளுக்கு ஒரு அத்தியாயம் என்று அதை ஒரு வருடம் முழுவதும் திரும்ப திரும்ப வாசித்தால் என்ன? நீங்கள் அவ்வருடத்தின் ஆரம்பத்தில் இருந்ததை விட, அதின் முடிவில் அதிக ஞானமுள்ளவராக இருப்பீர்கள் என என்னாள் உறுதியளிக்க முடியும்.

நீங்கள் எப்படி?

ஒரு வேளை நீங்கள் இப்போது தேவனுடைய ஞானத்தை தேடிக்கொண்டிருக்கலாம் - அது எவ்வளவு அவசரமாக தேவை என்பது உங்களுக்கு தெரியும். அல்லது இந்த கடிதத்தை நீங்கள் வாசித்துக்கொண்டிருந்த போது, உங்களுக்குள் ஞானம் என்ற பொக்கிஷத்தை நமக்கு பகிர்ந்தளிப்பவரோடு ஒரு நெருக்கமான உறவு வேண்டும் என்ற வாஞ்சை எழும்புவதை நீங்கள் உணரலாம். அந்த வாஞ்சையை பின் வரும் ஜெபத்தின் மூலம் நாம் தேவனுக்கு தெரியப்படுத்தலாம்:

பிதாவே, நான் இப்போது எந்த ஞானத்தை குறித்து வாசித்தேனோ, அந்த ஞானத்தை தேடியும், வேண்டியும் உம்மிடத்தில் வருகிறேன். “நீர் இருக்கிறீர் என்றும், உம்மை உண்மையாய் தேடுகிறவர்களுக்கு நீர் பலன ளிக்கிறவர்” என்பதையும் நான் விசுவாச அறிக்கையாக செய்கிறேன்.

உம்மில் மறைந்திருக்கும் ஞானத்தின் பொக்கிஷங்களை நீர் எனக்கு தர வேண்டும் என்று நான் இப்போது கேட்கிறேன். இது வரை உம்மோடு நான் அறிந்திராத ஒரு ஆழமான, நெருக்கமான உறவை நான் உம்மிடம் வேண்டுகிறேன்.

என்னிடம் நீர் காண்பித்த கிருபைக்காகவும் உண்மைக்காக நன்றி செலுத்துகிறேன். எனக்கென்ன குறை உண்டென்றும், எனக்கு என்ன தேவை என்றும் நீர் அறிவீர். உம்முடைய பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் உம்முடைய ஞானத்தை நீர் எனக்கு தந்ததற்காக நன்றி.

ஆமென்.

YOUR DETAILS

NAME: MR / MRS / MISS ....

ADDRESS: ....

....

CITY: .... POSTCODE: ....

EMAIL: ....

A contribution to help cover our costs is always appreciated :

My gift enclosed: ₹

Derek Prince Ministries - India

Contact us

www.derekprince.in

admin@derekprince.in

Ph 9585538205

1-C EVR Road, 3rd Floor,(Opp. Chinthamani Mall), Puthur, Trichy - 620017

facebook DEREK PRINCE MINISTRIES - INDIA

www.derekprince.in